## உடுதும்பர பிரதேச சபை
## கண்டி மாவட்டம்

-------------------------------------------

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அந்நிதிக்கூற்றுகள் தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 2018 ஜுலை 09 திகதி தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து உடுதும்பர பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபளிக்கிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் 4 வகைகளின் ஆரம்ப பெறுமதி கொள்வனவு என மீண்டும் குறிப்பிடப்பட்டதன் காரணமாக அக் கணக்கின் மீதி ரூபா 61,070 இனால் கூடுதலாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுகளில் நிருவப்பட்ட 3 நீர் உத்தேசத் திட்டங்களின் பெறுமதி மற்றும் மீளாய்வாண்டில் மேன்படுத்தப்பட்ட 2 நீர் உத்தேசத் திட்டங்களின் பெறுமதியான ரூபா 2,512,045 மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்கு சொந்தமான அனைத்து காணிகளினதும் பெறுமதிகளை மதிப்பீடு செய்து கணக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதித் திகதிக்கு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 12,008,673 ஆனதுடன், அதில் ஆண்டு 1 முதல் 5 வரையான காலத்திற்கு உரிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 1,767,633 மற்றும் 5 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 197,481 ஆன மீதியொன்றும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு செலுத்த வேண்டிய கணக்கு மீதி ஒன்றின் பெறுமதி ரூபா 12,410,918 ஆனது. அது தொடர்பான காலப் பகுப்பாய்வின் பிரகாரம் 5 ஆண்டுகளை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 11,707 ஆனதுடன், ஆண்டு 1 இற்கும் 5 இற்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 2,235,858 ஆகக் காணப்பட்டது.

1.3.3 **கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக கூட்டுத்தொகை ரூபா 24,500,390 ஆன 05 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்தியுடன் ஆய்வு செய்ய முடியாமல் இருந்தது.

1.3.5 **இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசட்டத்தின் 18 ஆம் பிரிவு | | சனசமூக மண்டபம், சுடுகாடு மற்றும் பாதைகள் உள்ளிட்ட 99 சொத்துக்களுக்காக உரித்துரிமைக்கான ஆவனங்களை பெற்று இருக்காமை. |
| (ஆ) | இலஙகை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் 571 (2) (ஆ) | 157,921 | 2 ஆண்டுகளை விஞ்சியிருந்த 10 வைப்புகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை. |
| (இ) | 2000 இல் 53 ஆம் இலக்க மற்றும் 1988 இல் 56 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இல் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களுக்கு இணங்கிய இலக்கம் 1533/16 கொண்ட 2008 சனவாரி 25 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி. | 13,200 | அனுமதிபத்திரங்கள் பெற்றுக்கொள்ளாது நெல் ஆலை உள்ளிட்ட 3 கைத்தொழில்கள் நடாத்திச்செல்லப்பட்டிருந்தன. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 திகதிய இலக்கம் ஐஏஐ/2002/02 கொண்ட திறைசேரி சுற்றறிக்கை. | | கணனி மற்றும் உதிரிப்பாகங்களுக்காக வேறான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2007 மே 11 திகதிய இலக்கம் 09/2007 கொண்ட அரச நிர்வாக சுற்றறிக்கையில் 05 ஆம் பந்தி | 62,557 | ஓப்பந்த அடிப்படையில் 2016 ஒக்தோபர் 19 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப அலுவலரிற்கு 2016 ஒக்தோபர் 19 முதல் 2017 திசெம்பர் 31 வரை வாழ்கைச் செலவுப்படி ஒன்று செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2016 மார்ச் 17 ஆம் திகதிய இலக்கம் 2016/03 கொண்ட மத்திய மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை. | | |
| | (i) 10 ஆம் பந்தி | | சபைக்கு சொந்தமான கடையறைகளை உப குத்தகைக்கு வழங்கக்கூடாத போதும், குத்தகைக்காரர்களால் பல்வேறு விதத்தில் பல்வேறு நபர்களுக்கு உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (ii) | 12 ஆம் பந்தி | சபை அனுமதியின்றி கடையறைகளில் அமைப்பை மாற்றக்கூடாத போதும், பொது வியாபார கட்டிடத் தொகுதியில் 01 ஆம் இலக்கம் கடையறையை பிரித்து பகுதியாக்கி அதில் ஒரு பகுதியை மாதாந்தம் ரூபா 2,000 வீதம் பெறப்பட்டிருந்தன. |
| (iii) | 13 ஆம் பந்தி | கடையறைகளை குத்தகைக்கு வழங்கையில் அரச நிருவனங்களுக்கு விஷேட சமுகை வழங்கக் கூடாத போதும், டென்டர் கோரப்படாது 4 நிருவனங்களுக்கு கட்டிடங்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| (எ) | 2013 ஜுலை 31 திகதிய இலக்கம் 07 கொண்ட உள்ளுராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை மற்றும் முச்சக்கர வண்டி ஒழுங்கமைப்பு தொடர்பாக ஆலோசணை வழங்கியுள்ள அமைச்சரவை விஞ்ஞாபனம் | முச்சக்கர வண்டி சேவையை ஒழுங்கமைக்கும் வகையில் உள்ளுராட்சி நிருவனங்களுக்கு அதிகாரத்தை கொடுத்து ஒழுங்கு விதிகளை வழங்கியுள்ள போதும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 1,783,732 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 2,687,732 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டி தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இன் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இன் மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரி மற்றும் குத்தகை வாடகை | 1,196,000 | 1,277,747 | 1,023,324 | 254,423 | 671,000 | 637,944 | 540,702 | 97,241 |
| வாடகை | 1,830,000 | 1,979,240 | 1,746,560 | 232,680 | 1,555,000 | 1,779,710 | 1,871,395 | (91,684) |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,290,000 | 1,131,590 | 833,140 | 298,450 | 940,100 | 1,206,750 | 1,058,700 | 148,050 |
| ஏனைய வருமானம் | 4,979,000 | 8,964,052 | 7,124,889 | 1,839,163 | 4,449,500 | 3,428,075 | 5,237,738 | (1,809,663) |
| | 9,295,000 | 13,352,629 | 10,727,913 | 2,624,716 | 7,615,600 | 7,052,479 | 8,708,535 | (1,656,056) |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

பிரதேச சபை அதிகாரி எல்லையில் முன்னேற்றமான பிரதேசங்களை இனங்கண்டு வீத வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்ககப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 வீத வரி மற்றும் வாடகை

**வீத வரி**

(i) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிலவிய ரூபா 210,765 ஆன நிலுவை மீதியிலிருந்து ஆண்டினுள் ரூபா 97,942 அறவிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை வீத வரி மீதி ரூபா 246,185 ஆனதுடன், அம் மீதியினுள் 1 ஆண்டுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடையிலான காலத்திற்குரிய ரூபா 112,823 தொகை உள்ளடங்கியிருந்தது.

(ஆ) **ஏக்கர் வரி**

(i) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிலவிய ரூபா 197,257 ஆன நிலுவை மீதியிலிருந்து ஆண்டினுள் ரூபா 6,972 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 200,564 ஆனது. அம் மீதினுள் 1 ஆண்டுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடையிலான காலத்திற்குரிய ரூபா 51,620 மற்றும் 5 ஆண்டுகளை விஞ்சியிருந்த ரூபா 138,665 தொகை உள்ளடங்கியிருந்தன.

### 2.2.4 ஏனைய வருமானம்

(அ) **வாடகை வண்டி மற்றும் முச்சக்கர வண்டி தரிப்பிட கட்டணம்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை வாடகை வண்டி மற்றும் முச்சக்கர வண்டி தரிப்பிட கட்டண மீதி ரூபா 222,300 ஆனதுடன், அம் மீதயினுள் 1 ஆண்டு முதல் 5 ஆண்டுகள் வரையிலான காலத்திலிருந்து அறவிடவேண்டி இருந்த ரூபா 175,100 தொகை உள்ளடங்கியிருந்தது.

(ஆ) **டெக்டர் மற்றும் பவுஸர் சேவை கட்டணம்**

மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 66,000 ஆன நிலுவை மீதியொன்று நிலவியதுடன், அம் மீதி 5 ஆண்டு காலத்தைை விஞ்சியிருந்தது.

**(இ) நீர்க் கட்டணம்**

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ள ரூபா 686,844 ஆன நிலுவை மீதியிலிருந்து ஆண்டினுள் ரூபா 402,238 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு திசம்பர் 31 திகதி நிலுவை நீர்க்கட்டணம் ரூபா 594,879 ஆனதுடன், அம் மீதினுள் 1 ஆண்டு முதல் 5 ஆண்டுகள் வரை காலத்திற்குரிய ரூபா 108,829 மற்றும் 5 ஆணடுகளை விஞ்சிய ரூபா 138,665 உம் உள்ளடங்கியிருந்தன.

### 2.2.5 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண சபை பிரதான செயளாலர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 59,285 மற்றும் முத்திரை கட்டண வருமானம் ரூபா 2,594,694 ஆனது.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியிலான ரூபா 2,594,694 நிலுவை முத்திரை கட்டணத்தினுள் 5 ஆண்டுகளுக்கு அதிகமான ரூபா 11,000 ஆன மீதியொன்று மற்றும் 1 ஆண்டு முதல் 5 ஆண்டுகள் வரையான காலத்திற்குரிய ரூபா 763,954 ஆன மீதிகளும் காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயளாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்கமைத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் பொது நலன், வசதிகள் மற்றும் நலன் புரி போன்ற சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வரமாறு.

(அ) **ஒதுக்கீட்டினை செலவு செய்தல்**

சபையின் சுய சம்பாதிப்பு வருமானத்தில் குறைந்த பட்சம் 30 சத வீதம் சபை அதிகார எல்லையில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தப்பட வேண்டிய போதும், மீளாய்வாண்டின் ரூபா 8,497,334 ஆன மீண்டுவரும் வருமானத்தில் பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு 13 சத வீதமான ரூபா 1,133,474 மாத்திரமே ஈடுபடுத்தப்பட்டிருந்தன. மூலதன அன்பளிப்பாக கிடைத்த ரூபா 17,977,168 தொகையில் ரூபா 14,342,954 மாத்திரமே மூலதன செலவாக மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) **துணைச் சட்டம்**

பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 30 பிரதான நடவடிக்கைகளை மேற்கொள்ள துணைச் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டிய போதும் 2017 திசெம்பர் 31 திகதி வரையும் 2 விடயங்களுக்கு மாத்திரமே துணைச்சட்டம் விதிக்கப்பட்டிருந்தன.

(இ) **செயல் நடவடிக்கை திட்டம்**

அமுல்படுத்தப்பட்டிருந்த துணைச் சட்டங்களின் பிரகாரம் சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த ஒரு விடயத்திற்காக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) **எதிர்பார்த்த விளைவுகளை (out come) பெற்றுக் கொள்ளாமை**

---

புரநெகும கருத்திட்ட ஒதுக்கீட்டிலிருந்து ரூபா 42,160,398 செலவில் பலநோக்கு கட்டிடமொன்றை நிர்மாணித்து எதிர்பார்த்த வெளியீட்டு மட்டதினை (out put) அடைந்திருந்த போதும் அக்கட்டிடத்தின் 4870 வருக்க அடி அளவினை எவ்வித பயன்பாடிற்கும் எடுத்திருக்கவில்லை.

(உ) **கழிவுப் பொருள் முகாமை**

---

சபை அதிகார எல்லையினுள் மாதாந்தம் ஒன்று சேறும் கழிவுப் பொருட்களிலிருந்து உக்களடையும் கழிவுப் பொருட்கள் 1.5 டொன் மற்றும் உக்களடையாத கழிவுப் பொருட்கள் 0.5 டொன் கெவ்லேகம இயற்கை பசளை கொட்டிலிற்கு அனுப்பப்பட்டிருந்தன. இவ் இயற்கை பசளை கொட்டிலின் பசளைக் குழி மற்றும் களஞ்சியத்திற்காகக 2010 ஆண்டில் ரூபா 3,487,828 தொகையும், இயந்திர உபகரணங்கள் கொள்வனவிற்காக 2012 - 2017 ஆண்டுகளில் ரூபா 5,069,140 தொகையும் செலவிடப்பட்டிருந்தன. அவதானங்கள் பின்வருமாறு.

(i) இயற்கை பசளை குழியிற்கு மேலாக தயாரித்துள்ள கூறை முறையாக நிர்மாணிக்கப்படாததனால் பெகோ இயந்திரத்தின் மூலம் கழிவுகளை புரட்டுவதற்கோ உக்களடைந்த பசளைகளை வெளியில் எடுக்கவோ முடியாதிருந்ததுடன், பரிசோதனையின் போது பசளை கொட்டிலில் கழிவுப் பொருட்கள் நிரம்பி இருந்தன.

(

(ii) கழிவுப் பொருட் கொட்டில் நிர்மாணிக்கப்படடு இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்து உயர் தரத்திலான இயற்கை பசளையை மக்களுக்கு பெற்றுக் கொடுத்தல், இயற்கை பசளையை வீட்டுத் தோட்டப் பயிர் செய்கைக்காக வழங்குதல், இயற்கை பசளை கருத்திட்ட நடவடிக்கைகளை வினைத்திறனுடனும் பயனுள்ளதாகவும் நறைவேற்றுதல் போன்றவற்றை இலக்காகக் கொண்டிருந்த போதும் 2018 ஜனவரி மாதம் வரை இயற்கை பசளை உற்பத்தி செய்யப்படவில்லை.

(ஊ) **நிலையான அபிவிருத்தி**

---

சபையினால் நிலையான அபிவிருத்தி நோக்கின் இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள மற்றும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான அளவுகோள்களை இனங்கண்டிக்கவில்லை.

3.2 **முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கணனி இயழுமையை பரீட்சிக்கும் வினைத்திறன் காண் தடைப்பரீட்சை சித்தியடைதலின் மீது பயிற்சிக் கொடுப்பனவை மீள்நிரக்கிக் கொள்ளும் வரை 2013 மார்ச் 08 திகதி ரூபா 3,783 முற்பணம் மற்றும் உள்ளூராட்சி டிப்லோமா பாடநெறி 2016/2017 இல் பங்குபற்றும் அலுவலர்களின் பாடநெறி பயிற்சிக் கட்டணம் செலுத்த 2017 மார்ச் 17 திகதி ரூபா 150,000 ஆன முற்பணம் செலுத்தப்பட்ட போதும், 2018 மே 18 திகதி வரை அப்பணம் மீள்நிரப்பப்படவில்லை.

(ஆ) பிரதேச சபை வழுவூட்டும் நிகழ்சித்திட்டத்தின் கீழ் 2016 ஆண்டில் ரூபா 817,000 மற்றும் 2017 ஆண்டில் ரூபா 4,758,528 செலவில் திஸ்ஸ அத்தநாயக கேட்போர்கூடம் பழுதுபார்க்கப்பட்டிருந்தது. 2018 ஜனவாரி 24 திகதி பௌதீக பரிசோதணைனயின் போதும் களற்றி அகற்றிய குமிழ்கள், கதவுகள் யன்னல்கள் மற்றும் நிலைகள் போன்றவை கட்டிட முன்பக்கத்தில் குவிக்கப்பட்டிருந்தன. இக் கட்டிடத்தை வாடகைக்கு பெற்றுக் கொள்ள வருபவர்களின் மனதை கவரக் கூடிய வகையில் சுற்றுப்புர சூழலை சுத்தப்படுத்தி கட்டிடத்தை பயன்படுத்தக் கூடிய வகையில் தயாரித்திருக்கவில்லை.

3.3 **மனித வள முகாமை**

(அ) **ஊழியர் வெற்றிடமும் மிகையும்**

அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாரான ஆளணி பரிசோதனையின் போது 01 ஊழியர் மிகையும் 29 பற்றாக்குறைகளும் நிலவின.

3.4 **செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

(அ) சபைக்கு செந்தமான 3 நீர் கருத்திட்டங்களின் வாடிக்கையாளர்கள் 523 ஆன போதும், 135 வாடிக்கையாளர்களுக்கு மாத்திரமே நீர் மாணிகள் பொறுத்தப்பட்டிருந்தன. எஞ்சிய வாடிக்கையாளர்களில் 388 நபர்களின் வியாபார நிலையங்களிலிருந்து ரூபா 200 மற்றும் வீட்டுப் வாடிக்கையாளர்களிடமிருந்து ரூபா 150 நிலையான கட்டணமொன்று அறவிடப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு பொது சந்தை கடையறைகளிலிருந்து ரூபா 79,440 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தன.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

3.5.1 **விளைவற்ற/குறை பயன்பாட்டு சொத்துக்கள்**

(அ) உள்ளுராட்சி நிருவனங்களுக்கு இயந்திர உபகரணங்கள் பங்கிடும் நிகழ்சித் திட்டத்தின் கீழ் பொது நிர்வாக மற்றும் உள்ளுராட்சி அமைச்சினால் 2015 ஆண்டில் சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 17,649,179 பெறுமதியான பெகோ லோடர் மற்றும் ரூபா 6,009,602 பெறுமதியான டபள் கெப் வண்டி மிகைக் குறைந்த காலம் பயன்படுத்தப்பட்டதனால் குறை பயன்பாட்டுடன் நிலவின.

(ஆ) சபைக்கு சொந்தமான பழைய கிராம சபை அலுவலகம் அமைந்துள்ள கட்டிடத்தின் ஒர் அறையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகம் நடாத்தப்படுவதுடன், அக் கட்டிடத்தின் எஞ்ஞிய பகுதிகள் பல வருடங்களாக பயனற்று நிலவின.

3.6 **பெறுகைகள்**

**3.6.1 பெறுகைகள் திட்டம்**

மீளாய்வாண்டினுள் ரூபா 3,724,877 ஆன மூலதன செலவு மேற்கொள்ளப்பட்ட போதும் சபை மூலம் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6.2 வழங்கல் மற்றும் சேவைகள்**

**திஸ்ஸ அத்தநாயக கேட்போர்கூட பழுதுபார்த்தல்**

2017 ஆண்டினுள் பிரதேச சபை வழுவூட்டும் தேசிய நிகழ்சித்திட்டத்தின் கீழ் ரூபா 5,400,000 ஒதுக்கீட்டில் திஸ்ஸ அத்தநாயக கேட்போர்கூடத்தை பழுதுபார்கும் பெறுகை நடைமுறை பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இவ் வேலையை நிறைவேற்றியிருந்த தர்சண கன்ஸ்டிரக்சன் மூலம் முன் வைக்கப்பட்ட விலை மணு டிபெக்ஸ் இடப்பட்டு மாற்றப்பட்டிருந்தது.

(ii) மதிப்பீட்டின் இலக்கம் 08, 17, 18 விடயங்கள் மதிப்பிடப்பட முடியுமாக இருக்கையில் வேலை விடயங்களை மேலதிக வேலைகளாக இடப்பட்டிருந்ததுடன், அதற்காக மேலதிக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படவில்லை.

**3.6.3 ஒப்பந்த நிருவாகம்**

**சமூக அடிப்படை சங்கங்களுக்கு ஒப்பந்தம் கையளித்தல்**

(அ) மீளாய்வாண்டில் ரூபா 7,745,000 பெறுமதியான 17 வேலைகள் சமூக அடிப்படை சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. உள்ளூராட்சி நிறுவனங்கள் அமைந்துள்ள அதிகார பிரதேசத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது சமூகப் பங்களிப்பை பெற்றுக்கொள்ளல் மற்றும் கருத்திட்டத்தினை உயர் தரத்தில் நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கில் சமூக அடிப்படை சங்கங்களுக்கு நேரடியாக ஒப்பந்தங்களை கையளிக்க 2012 ஜனவரி 05 திகதிய இலக்கம் 1/2012 கொண்ட பொது நிதி சுற்றறிக்கை மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும், பெறும்பாலான கருத்திட்டங்கள் சங்கங்கள் மூலம் பெறப்பட்டு வேறு ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வேறு நபர்களினால் செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்பட்டதுடன், அதன் வேலைகள் தரமாகவும் மற்றும் நியமத்திற்கு அமைய நிறைவேற்றப்படவில்லை என அவதானிக்கப்பட்டன.

(ஆ) **உடுதும்கர ஹால்யால பாதையின் மழை நீர் கால்வாய் கட்டுதல்**

2017 ஆண்டு சபை நிதியத்தினால் உடுதும்கர ஹால்யால பாதையின் மழை நீர் கால்வாய் கட்டுதல் ரூபா 1,000,000 பெறுமதியிற்கு உடுதும்கர கிராம சமுர்தி சங்கத்திற்கு ஒப்படைத்து ரூபா 876,082 இற்கான வேலைகள் நிறைவு செய்யப்பட்டிருந்தன. 2018 ஜனவரி 23 திகதி இவ் வேலையின் பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மதிப்பீட்டின் வேலை விடயம் 4 பிரகாரம் 1:2:4 (19 mm) அளவான கலவையில் கொன்கிரிட் போடப்பட வேண்டிய போதும், கால்வாயிற்கு போடப்பட்ட கொன்கிரிட் கலவை மிகவும் பலவீனமான நிலையில் நிலவியது.

(ii) கொன்கிரிட் கால்வாயின் அடிப்பகுதி 4 அங்குல கனதியில் போடப்பட வேண்டிய போதும், 4 இடங்களை உடைத்து பரீட்சிக்கையில் அடிப்பகுதியின் கனதி 3, 3, 4, 3 ½ எனக் காணப்பட்டன.

(iii) கால்வாயின் கொன்கிரிட் கலவை பலவீனமான நிலையில் காணப்பட்டதனால் இக் கால்வாயிற்காக கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 876,082 தொகை பயனற்ற செலவொன்றாக காணப்பட்டது.

(இ) **ஹுன்னஸ்கிரிய உத்தேச நீர் விணியோகத்திட்ட பழுதுபார்த்தல்**

2017 ஆண்டினுள் பிரதேச சபை வழுவூட்டும் நிகழ்சித்திட்டத்தின் கீழ் ரூபா 4,325,000 ஒதுக்கீட்டில் வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்த ஹுன்னஸ்கிரிய உத்தேச நீர் விநியோகத்திட்ட பழுதுபார்த்தல் 2017 டிசம்பர் 26 திகதி வரையிலும் மதிப்பீட்டின் வேலை இலக்கம் 1 முதல் 33 வரை ரூபா 1,309,587 தொகை கொடுப்பனவு செய்ய விதிந்துரைக்கப்பட்ட போதும், 2018 ஜனவரி 24 திகதி பௌதீக பரிசோதனையின் போது நீர் விநியோகத்திட்ட சுத்திகரிப்பு தாங்கி உட்பகுதியில் சாந்து பூசும் வேலையின் ஒரு பகுதி செய்யப்பட்டுக்கொண்டு நிலவியது. ரூபா 4,325,000 ஒதுக்கீட்டில் ரூபா 1,309,587 தொகையான வேலைப் பகுதி மாத்திரம் நிறைவு செய்யப்பட்டதனால் பிரதேச சபை வழுவூட்டலுக்கு கிடைத்த ஒதுக்கீட்டின் 69.7 சத வீதம் பயன்படுத்தப்படவில்லை.

(ஈ) **அஸ்வெத்தும விவசாய பாதை அபிவிருத்தி செய்தல்**

2017 உள்ளூராட்சி நிச்சய அன்பளிப்பின் கீழ் அஸ்வெத்தும விவசாய பாதை அபிவிருத்தி செய்தல் ரூபா 300,000 பெறுமதியிற்கு நுகேதென்ன மேற்கு கமநல சங்கத்திற்கு ஒப்படைத்து ரூபா 270,000 இற்கான வேலைகள் நிறைவு செய்யப்பட்டிருந்தன. 2018 ஜனவரி 23 திகதி இவ் வேலையின் பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2011 ஒக்டோபர் 14 திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் 2/2011 கொண்ட உள்ளூராட்சி நிருவனங்களில் வேலைகளை நிறைவேற்றும் ஒழுங்குகள் எனும் தலைப்பிலான சுற்றறிக்கை பிரகாரம் அரச ஒதுக்கீட்டின் மீது வேலை ஒன்றை செய்யும் போது பயன்படுத்தும் பயன்பாட்டாளர்களின்

எண்ணிக்கை 20 இற்கு அதிகமாக இருக்க வேண்டிய போதிலும், ஓர் குடும்பத்தின் பயன்பாட்டிற்காக இவ் வேலை நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ii) 2012 ஜனவரி 05 திகதிய இலக்கம் 01/2012 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் 3:2 (i) பந்தி பிரகாரம் சங்கத்தின் நிதி இயழுமை உரிதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii)

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

---

மீளாய்வாண்டினுள் வருமானம் மற்றும் செலவின விடயங்கள் இடையில், ஒதுக்கீடு மாற்றப்பட்ட பின்னரும் பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் இடையில் கனிசமான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டன. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ)** 12 செலவின விடயங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 2,360,000 ஆன ஒதுக்கீட்டிலிருந்து எவ்வித செலவும் மேற்கொள்ளப்படவில்லை.

**(ஆ)** 23 செலவின விடயங்களின் தேறிய ஒதுக்கீடு மற்றும் மீதிகளிற்கிடையில் 30 சதவீதம் முதல் 92 சதவீதம் வரையிலான விலகல்கள் நிலவின.

**(இ)** 42 வருமான விடயங்களின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாரரன வருமானத்திற்கிடையில் 25 சதவீதம் முதல் 13200 சதவீதம் வரையிலான விலகல்கள் நிலவின.

**(ஈ)** 10 வருமான விடயங்களின் ரூபா 2,483,000 ஆன வருமானத்திலிருந்து எவ்வித வருமானத்தையும் ஈட்டிக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

---

உள்ளகக் கணக்காய்விற்காக அலுவலகலொருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அவ் அலுவலருக்கு வேறு பணிகள் ஒப்படைக்கப்பட்டிருந்ததனால் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று செய்யப்படவில்லை. 2017 ஆண்டினுள் 2 கணக்காய்வு அறிக்கை மாத்திரம் சமர்பிக்கப்பட்டிருந்தன.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன், பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| (அ) நிலையான சொத்துக்கள் | (i) சபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் மெய்மை ஆய்வு செய்யப்பட்டு எல்லா சொத்துக்களையும் இனங்காணுபவத்திற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) சபைக்கு சொந்தமான காணிகள் முறையான அனுமதியின்றி வெளித்தரப்பினருக்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | பயன்படுத்த இடமளித்திருந்தமை. |
| (ஆ) | கணக்கீடு | (i) | சபைக்கு சொந்தமான எல்லா சொத்துக்களையும் இனங்கண்டு கணக்கிடாமை. |
| | | (ii) | சில கணக்கு மீதிகள் தீர்க்கப்படாமல் தொடர்ந்தும் முன்கொண்டு செல்லப்படுகின்றமை. |
| (இ) | வாகன கட்டுப்பாடு | (i) | சில வாகனங்கள் குறை பயன்பாட்டுடன் நிலவின. |
| | | (ii) | தின ஓட்டக் குறிப்புகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை. |
| (ஈ) | வருமான கட்டுப்பாடு | (i) | சபை கடையறைகளை புதிய மதிப்பீட்டிற்கமைய ஒப்பந்தங்கள் கைசாத்திடாமை. |
| | | (ii) | புதிய வீதவரிப் பிரதேசங்கள் இனங்காணப்படாமை. |
| | | (iii) | நிலுவை வருமானங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (உ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் | (i) | நீண்ட காலமாக மாற்றமின்றி முன்கொண்டுவரப்படும் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பதற்கு முறையான திட்டமொன்று தீட்டப்பட்டு நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்காமை. |